1980 ஜூலை 31]

திரு. பெ. சு. திருவேங்கடம்: 15 மைல்கள் தூரத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது, மாட்டு வண்டியிலே எடுத்துச் செல்லப்படுவதால் விடியற்காலையிலேயே எடுத்துச் செல்கிறார்கள், அதன் காரணமாக உணவே கெட்டுவிடுகிறது. ஆகவே வேன் திட்டத்தையே நல்ல முறையிலே செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. நாம் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஒரு புதிய முறையைக் கையாண்டு வருகிறோம். காலப்போக்கிலே அதிலே குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களைய முன்வருவோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியபோது 15 மைல்கள் போவதால் உணவு கெட்டுவிடுகிறது என்ற நிலையைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி எடுத்துச் செல்கிறபோது அந்த உணவில் சூடு பாதுகாக்கப்படுகிற வசதிகளையெல்லாம் செய்துதான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உலக சுகாதார கழகம் இத்த உணவை எடுத்துச் செல்வதற்கு ஏதாகிலும் வசதிகள் கொடுத்து உதவி செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைப்பற்றி என்னிடத்திலே குறிப்பு இப்போது இல்லை.

## ஒன்றியங்களில் விதைப்பொருட்கள் வழங்கல்

*வினா எண் 84—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஒன்றிய அலுவலகங்களிலுள்ள விவசாய அபிவிருத்தி நிலையங்களில் உரிய காலத்தில் பருவத்திற்கு தகுந்தாற்போல் விதைப்பொருட்கள் வினியோகிக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பரிசீலித்து அந்தந்த பருவத்திற்கு தகுந்த விதைப் பொருட்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏற்ற பருவகாலத்திலே விதையைக் கொடுக்காத காரணத்தால் வேறு தனியாரிடம் வாங்கி விதைக்கின்ற காரணத்தால் பயிர்கள் சரியாக முளைக்காத நிலைமை இருப்பதால் வேளாண்மையும் கெட்டுவிடுகிறது. ஆகவே அரசு விதைப் பண்ணைகளிலிருந்து உரிய பருவத்திலே கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, திட்டமிட்டபடி உரிய பருவத்திற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னாலேயே வித்துக்கள் அனுப்பப்பட்டு டெப்போக்களில் வைக்கப்படுகின்றன. எந்த பருவகாலத்திலே, எந்த விதை எந்த டெப்போவிலே கிடைக்கவில்லை என்ற விவரத்தைத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : கடலைக்காய் ஆடிப்பருவத்திலே விதைக்க வேண்டுமென்றால் சித்திரை, வைகாசி மாதங்களிலே வித்துக்கள் கிடைக்கவேண்டும். ஆனால் பெருந்துறை ஒன்றியத்திலே கேட்டால் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எண்ணை வித்துக்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற விதைகள் கரீப் பருவத்திலே 3927 டன்களும், ராபி பருவத்திலே 1505 டன்களும் முறைப்படி அனுப்பிவைக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. குறிப்பிட்ட அந்த ஒன்றியத்திலே வந்து சேரவில்லை என்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : விதைப்பண்ணைகளில் கொடுக்கப்படும் விதைகள் பருவத்திற்குத் தகுந்தாற்போல் கொடுக்கப்படுதல் வேண்டும். முதுகளத்தூர் விவசாயப் பண்ணையில் கோடை காலத்திலே ஏ.டி.டி. 31 என்ற விதையைக் கொடுத்தார்கள், முகவை மாவட்டத்திலே கோடைகாலத்திலே அது விவசாயம் செய்வதற்கு லாயக்கற்றது என்று அதிகாரிகள் கூறினார்கள். அந்த விதை எப்படி வினியோகிக்கப்பட்டது என்று கேட்டபோது எப்படியோ தவறுதலாக வந்து விட்டது என்று கூறினார்கள். இந்த மாதிரி தவறுகள் நடைபெறாமல் இருக்க அரசு சுற்றறிக்கை அனுப்பி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தவறுகள் களையப்படும்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திலே விதைகள் இல்லை என்று அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது, அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

1980 ஜூலை 31]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, விவசாயக் கிட்டங்கிகளில் முந்தைய பருவ காலத்திலே அனுப்பப்பட்ட விதைகளை வைத்திருக்கின்ற காரணத்தால் வரக்கூடிய பருவ காலத்திற்கு அதையே கொடுக்கிறார்கள். அதை தடுக்க அரசு முன்வருமா? ஒவ்வொரு கிட்டங்கியிலும் அப்படிப்பட்ட விதைகள் வைக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதால் அவைகளின் முளைப்புத் திறன் பர்சென்டேஜ் ஆப் ஜெர்மினேஷன் சரியாக இல்லை, ஆகவே அதைப் பார்த்து விநியோகம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: டெப்போக்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறபோது அந்த விதைகளுக்கான விதைச் சான்றிதழ்கள் பெற்றுத்தான் அனுப்பிவைக்கப்படுகின்றன; பருவகாலங்களிலே கொடுக்காமல் அங்கேயே இருப்பிலே வைக்கப்பட்டு, அந்த விதைகள் பின்னாலே கொடுக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகள் இருந்தால் அவை நீக்கப்படும்.

[முற்பகல் 9-40]

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஒரு மாதகாலமாக திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் விதை டெப்போக்களில் குறுவைப் பட்டத்திற்கு நெல் விதை கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக ஒரு குறுகிய கால வினாவைக்கூட மூன்று வார காலத்திற்கு முன்பு நான் கொடுத்திருந்தேன். ஆனால் இதுவரையில் அது வரவில்லை. இந்தச் சந்தர்ப்பத்திலாவது, அந்த ஒன்றியங்களில் குறுவைப் பட்டத்திற்குத் தேவையான நெல் விதைகள் விநியோகிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தகவல் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எல்லா டெப்போக்களிலும் ஐ. ஆர். 20 விதை நெல் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக சரியான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூலக் கேள்வி பொதுவானது. தனிப்பட்ட முறையில் சில விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் தனியாகக் கேள்வி போட்டால் அதைத் தர முடியும்.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் விதைகள் கொடுக்கிறார்கள். அந்த விதைகள் தேர்வு பெற்ற, ஐ.எஸ்.ஐ. முத்திரையோடு கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கின்ற விதைகள் சரியாக முளைப்பது இல்லை. இதனால் மகசூல் பாதிக்கப்படுகிறது; முளைப்பது பாதிக்கப் படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் யார் அந்த ஐ.எஸ்.ஐ. முத்திரை கொடுத்தார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இப்படிப் பட்ட புகார்கள் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. வந்தால் கவனிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த விதைகளை விவசாயத் துறையில் ஒரு பிரிவில் வாங்கி, அதை ஒன்றியங்களுக்குக் கொடுத்து விற்கச் சொல்லுகிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் நான்கூட பொன்னி நெல் விதை கேட்டேன். விவசாயிகளிடமிருந்து சரியாக வாங்காமல், ஒன்றியங் களுக்குக் கொடுத்து விற்கச் சொல்வதால் சரியாக முளைப் பதில்லை. அதனால் ஒன்றியங்களுக்குக் கெட்டபெயர் ஏற்படுகிறது. பண்ணைகளில் இருந்து வரும் விதைகள் கிடைப்பது இல்லை. எனவே, அரசாங்கம் அதற்காக பண்ணைகளிலிருந்து கிடைக்க நடவடிக்கை எடுக்குமா? அமைச்சரவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பண்ணைகளிலே, அனைத்து இடங்களுக்கும் உரிய விதைகளை நாம் நிச்சயமாக உற்பத்தி செய்ய முடியாது. விதைப் பண்ணை கள், விதை மையம், தனியார் பண்ணைகள் என்று இந்தக் கூட்டு முயற்சிகளின் மூலம்தான் உற்பத்தி செய்து கொடுக்க முடியும். விதைப்பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்து அனைத்து இடங் களுக்கும் அனுப்புவது என்பது நடைமுறையிலே இயலாத ஒன்று.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவரவர் களே, இந்த 'சீட் ஃபார்ம்ஸ்'-இலிருந்து கிடைக்கும் விதைகள் நல்ல தாக இல்லை. எதைப் போட்டாலும் முளைப்பது இல்லை. இதற் கெல்லாம் காரணம் அதிகாரிகளின் கவனக் குறைவுதான் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, இந்தக் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1980 ஜூலை 31]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, குற்றச் சாட்டு பொதுவாக இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே எங்கே கெட்டுப் போவதைக் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டால் நடவடிக்கை எடுக்கலாம்.

## ஜோலார்பேட்டைக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 85—திரு ப. சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டைக்கு பாலாற்றிலிருந்து திருப் பத்தூருக்கு போகும் குடி தண்ணீர் குழாயிலிருந்து குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனை யில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியாளர் ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரையுடன் அரசு ஒப்புதலுக்கு அனுப்பி, ஒப்புதல் பெற்றவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இது நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருப் பதாகத் தெரிய வருகிறது. இதை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வரவர்களே, பரிசீலனையைத் துரிதப்படுத்தச் சொல்லுகிறேன்.

திரு தி. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, ஜோலார் பேட்டை பத்தாயிரம் மக்களுக்கும் அதிகமான மக்கள் தொகை யைக் கொண்ட பேரூராட்சியாகும். இது அந்தப் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பதாலும், இதற்குப் போட வேண்டிய தொகையையும் இந்த பேரூராட்சி கட்டுவதற்குத் தயாராக இருப்பதாலும், இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?